R5370

# "BLESSED ARE THE MEEK"

## "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியை போதிக்கிறார்." சங்கீதம் 25:9

ஒரு பூரண மனிதனுக்குக்கூட தனது மார்க்கத்தைக் குறித்தும் தனது வழிகளைக் குறித்தும் தீர்மானிக்கவும் முடிவு செய்யவும் தெய்வீக வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. ஒரு பூரண மனிதன் அவன் தன்னைக் குறித்த தேவனுடைய சித்தத்தை முழுமையாக அறியாதபடியினால், தனது அளவான அறிவினிமித்தம் தவறு செய்யாதிருக்க தெய்வீக வழிகாட்டுதலும், மேற்பார்வையும் தேவைப்படும் போது ஒரு அபூரண மனிதனுக்கு இது இன்னும் எவ்வளவு அதிகமாக தேவைப்படுகிறது! நல்லவர்கள் மற்றும் கெட்டவர்கள், புத்தியுள்ளவர்கள் மற்றும் புத்தியில்லாதவர்கள் போன்ற அனைத்து மானிட வகுப்பினருக்கும் இப்படிப்பட்ட அறிவுறுத்தல்கள் தேவைப்படுகிறது. ஆனால் ஒரே ஒரு வகுப்பார் மட்டுமே அதை ஏற்றுக்கொள்ளும் சரியான மனோபாவத்தில் இருக்கிறார்கள். அந்த வகுப்பார் மட்டுமே வேத வாக்கியங்களின்படி சாந்த குணமுள்ளவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

தங்களை தாழ்ந்தவர்களாக உணருகிற சாந்த குணமுள்ளவர்கள், உயர்ந்தவர்களாக காணப்பட வேண்டியது அவசியம் என்று நாம் சொல்ல முடியாது. ஆதாம் அந்த சம்பவத்தில் சாந்தமாக இருந்திருக்க முடியாது. இயேசு சாந்தமாக இருந்திருக்க முடியாது. பரம பிதாவும் சாந்தமாக இருந்திருக்க முடியாது. பரலோக பிதாவானவர் சாந்தமாக இருக்கிறார் என்று வேத வாக்கியங்களின்படி சொல்லப்படாத போது, இயேசு சாந்தமாக இருந்தார். அவர் பிதாவின் தற்சொரூபமாக மாம்சத்தில் இருந்தார். ஆகவே பரம பிதாவும் சாந்த குணத்தை பெற்றிருக்கிறார், அகந்தையிலிருந்து வேறுபட்டிருக்கிறார் என்று நாம் யூகிக்கலாம்.

### பெருமையுள்ளவர்களை தேவன் எதிர்க்கிறார்

நமது கர்த்தர் கூறினதாவது: "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்." நமது கர்த்தர் சாந்தமாக அதில் அவர் போதிக்கக்கூடியவராக இருந்தார். அவருடைய அந்த பரிபூரணத்திலும் அவர் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் இருந்ததை அவர் உணர்ந்தார். அவர் பட்ட பாடுகள் மூலம் கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார். சாந்த குணத்தை அல்லது போதிக்கக்கூடிய குணத்தை பெற்றிருந்ததினால் தான் நமக்கு இரட்சகராக இருக்கக்கூடிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இது இல்லாமல் அவர் நமது இரட்சகராக ஆகியிருக்கவே முடியாது என்று நாம் கருதலாம். இந்த குணம் இல்லாமல் இருந்தால், அவர் தன்னம்பிக்கையும் பெருமையும் உடையராக இருந்து பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்திருக்க மாட்டார். ஆண்டவரைப் போலவே சபைக்கும் இருக்கிறது.

சரியானபடி இயக்கப்பட்ட சிறிய திறமைகள் கூட தவறாக இயக்கப்பட்ட பெரிய திறமைகளைக் காட்டிலும் அதிக மதிப்புமிக்கதாக இருக்கிறது. அதிகமான பெரிய திறமை சரியான அறிவும் வழிகாட்டப்படுதலுக்குறைவுபடுவதால் வாழ்க்கைப்பாதை தவறாக வழி நடத்தப்படுகிறது. வழிகாட்டப்படுதலின் குறைவினால், போதிக்கப்படுதலின் ஆவி குறைவுபட்டு, சிறந்த வழியை, பிதாவின் வழியை அறிந்து கொள்ளும் விருப்பத்தை குறைவு படுத்துகிறது என்று நாம் கருதுகிறோம். ஒரு புறஜாதி மனுஷன், அவன் சாந்தகுணமுள்ளவானாக இருந்தால் தனக்கு யாரும் போதிக்க தேவையில்லை என்று நினைப்பதைக் காட்டிலும் கர்த்தரின் சித்தத்தை அறியக்கூடிய சந்தர்ப்பத்தை அதிகமாக பெறுவான் என்பதை நாம் காணலாம். இதை எல்லாம் அறிந்தவர்கள் ஆரம்பத்தில் போதனைகளை பெற்றுக்கொள்ளும் நிலைமையில் இருப்பதில்லை .

பெருமையுள்ளவர்களை எதிர்த்து நிற்கிறேன் என்று கர்த்தர் அறிவிக்கிறார். அவர்கள் அவருடைய பிள்ளைகளாக இருந்தாலும் அவர்களை தூரத்தில் வைக்கிறார். பெருமையுள்ளவர்கள் கர்த்தருக்குள் நெருங்கி வர அனுமதித்தால் அது இன்னும் அவர்களை பெருமையுள்ளவர்களாக்கும். அவர்கள் ஒரு தூரத்தில் வைக்கப்பட்டால், அவர்கள் சாந்த குணமுள்ளவர்களாகவும் போதிக்கப்படக் கூடியவர்களாகவும் தாழ்மையுள்ளவர்களாகவும் ஆகக்கூடும். ஆகையால் எல்லாருக்கும் போதனை தேவைப்படுகிறது என்பதை காண்கிறோம். அதை பெற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பவர்கள் மற்றும் தம்முடைய தேவைகளை உணர்ந்தவர்கள் மட்டுமே அவர்களது வழியை, அவர்களது வாழ்க்கையின் மார்க்கத்தை தீர்மானிப்பதற்கு கர்த்தருடைய வழிகாட்டுதலை பயன்படுத்தும் மனோபக்குவத்திலே இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையின் தற்கால மற்றும் வருங்கால காரியங்களை சரியான மதிப்பீடு செய்யும் சலுகைகளை பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு தம்முடைய குமாரனைப் பற்றிய அறிவுக்குள்ளும் அவரது அனைத்து ஆசீர்வாதங்களுக்குள்ளும் போதித்து வழிநடத்த கர்த்தர் பிரியமுள்ளவராயிருக்கிறார். அவர்கள் சாந்த குணத்தில் தொடர்ந்தால் அவர்களை தேவனுடைய சுதந்தரர்களாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உடன்சுதந்தரர்களாகவும் ஆக்குவதற்கு அவர் சாத்தியமுள்ளவராயிருக்கிறார். சாந்த குணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம். அவர்கள் ஆபிரகாமின் வித்தாவார்கள். ஆயிரம் வருட ஆளுகையில் கீழ்ப்படிகிற அனைத்து மனுக்குலத்தினருக்கும் இவர்கள் மூலமாக ஆசீர்வாதம் செல்லும். ஆயிரம் வருட யுகத்தின் கடைசி சோதனைக்குப் பிறகு முழு உலகமும் போதிக்கக்கூடியதாக இருக்கும். தேவன் சகல ஞானத்தின் ஊற்றாக இருக்கிறார் என்கிற பெரிய பாடத்தை கற்றுக் கொண்டிருப்பார்கள். இந்த போதனை மூலமாக அவர்கள் பலனடைவார்கள்.